**தலைப்பு 214 - பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு - 2024**

## 1. தூரநோக்கு, பணிகள் மற்றும் செயற்பாடுகள்

### 1.1 தூரநோக்கு

உலகளாவிய போக்குகளுக்கு ஏற்ப, நாட்டின் தேவைகளையும் அபிலாஷைகளையும் பூர்த்தி செய்யக்கூடிய ஒரு அதிநவீன பல்கலைக்கழக அமைப்பை உருவாக்குவதே பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தூரநோக்கமாகும்.

### 1.2 செயற்பணி

உயர் கல்வியில் ஆர்வமுள்ள கட்சிகளுடன் ஒத்துழைப்பதன் மூலம் தேசிய மற்றும் உலகளாவிய தேவைகளுக்கேற்ப கல்விக் கற்கை நெறிகளை வேறுபடுத்துதல், நியமங்களையும் அவற்றின் தரத்தையும் பராமரித்தல் மற்றும் உகந்த கற்பித்தலுக்கான பொருத்தத்தை உறுதி செய்தல், ஆராயச்சிகளை நடாத்திப் புதிய கண்டுபிடிப்புக்கள் மற்றும் உயர்கல்வி முறையை உலகளாவிய சேவைகளில் நாட்டின் தேவைகளுக்குப் பொருத்தமான உயர்ந்த மட்டத்திலான கற்றலை வளர்த்தல் மற்றும்/அல்லது அதற்கான வசதிகளைச் செய்தல், ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்புக்களை நடாத்துவதும் பொதுமக்களுக்கு பொறுப்புக்கூறும் வகையில் அர்ப்பணித்தலும், உயர் அங்கீகாரம் மற்றும் அதிக இடவசதிகளைக் கொண்டதான உயர் கல்வி முறைமை, தேவையான வளங்களை ஒதுக்குதல் மற்றும் சரியான வழிகாட்டுதலின் மூலம் நல்லாட்சி மற்றும் நிர்வாகத்தை நிறுவுதல், அபிவிருத்தியினைப் பேணிச் செல்லல் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பணிகள் ஆகும்.

### 1.3 பணிப்பொறுப்பு

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் பணிகள் மற்றும் செயற்பாடுகளை நிறைவேற்றுதல்.

## 2. மொத்த நிதிஏற்பாடு மற்றும் செலவினம்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்காக ஏற்படுத்தப்பட்டிருந்த மொத்த தேறிய நிதிஏற்பாடு ரூபா 72,711,106,000 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரையில் அவற்றில் ரூபா 71,226,857,790 மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் தேறிய நிதிஏற்பாட்டில் ரூபா 1,484,248,210 அதாவது 2.04 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக**

| செலவினம் | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | சேமிப்பு தேறிய நிதியேற்பாட்டின் சதவீதமாக |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | |
| மீண்டெழும் | 65,211,106,000 | 64,483,121,641 | 727,984,359 | 1.12 |
| மூலதன | 7,500,000,000 | 6,743,736,149 | 756,263,851 | 10.08 |
| மொத்தம் | 72,711,106,000 | 71,226,857,790 | 1,484,248,210 | 2.04 |

## 3. கணக்காய்வு அவதானிப்பு

தலைப்பின் கீழ் பாராளுமன்றத்தினால் ஏற்படுத்தப்பட்டிருந்த நிதிஏற்பாடு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஆணைக்குழுவின் செலவினத் தலைப்பின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டு பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டிருந்ததுடன், அந்த நிறுவனங்களினால் அந்த நிதிஏற்பாடு பயன்படுத்தப்பட்டிருந்தது. அந்த பல்கலைக்கழங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களின் இறுதி கணக்குகள் கணக்காய்வு செய்யப்பட்டு அது சம்பந்தமான அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படும்.